போர்வாள்

"போர்வாள்"

சந்தா விபரம்

★

ஓராண்டு	ரூ.	5 0 0
6 மாதம்	ரூ.	2 8 0
தனிப்பிரதி		0 1 6

ஆசிரியர்கள் : காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன், B A (Hons)

திராவிடர்
வார வெளியீடு

தனி இதழ் அணா 1½
வெளி நாடு அணா 2

வாள் 2 | சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 ஆனி 25
9—7—49 சனிக்கிழமை | வீச்சு 45

திருமணம் நிற்கவேண்டும்

இல்லையேல்

பெரியார் விலகவேண்டும்

நம் தலைவர் பெரியார் அவர்கள் திருமதி மணியம்மையைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாக 18—6—49 சனிக்கிழமையன்று சென்னை ரிஜிஸ்டிரார் ஆபீசில் மனுச் செய்து கொண்டார்.

இன்று இக் கட்டுரை தீட்டப்படும் நாள் 7—7—49 வியாழக்கிழமை! இடையே இருப்பன பதினெட்டு நாட்கள்!

இந்தப் பதினெட்டு நாட்களாகவும், நம் தலைவர் பெரியார் அவர்களைப் பார்த்து, இந்தப் பொருந்தாத் திருமணத்தைக் கைவிட்டுவிடும்படி கெஞ்சிக் கேட்டுக்கொண்டோம்.

மிகவும் பணிவாக வேண்டிக்கொண்டோம்.

தலைவரே இது தகுமா என்று முறையிட்டோம்!

நியாயமா இந்தப் போக்கு, ஏற்குமா, ஆகுமா, முறைதானா, செய்யலாமா என்று கேட்டுப் பார்த்தோம்!

இந்தத் திருமணம் பொருந்தாத் திருமணம் அல்லவா தலைவரே, இது நம் கொள்கைகளுக்கும் இலட்சியங்களுக்கும் நாம் செய்துவரும் பிரசாரத்திற்கும் நேர் மாறானதாக இல்லையா தந்தையே, மாற்றார் கை கொட்டிச் சிரிப்பரே இம் மணம் நடந்துவிட்டால், அதற்கு நாம் இடங்கொடுக்கலாமாபுத்தலகச்சிறப்பியே என்று சொல்லிப் பார்த்தோம்.

வெளியே தலைகாட்ட முடியவில்லையே—வெட்கமும் துக்கமும் உள்ளத்தை வாட்டுகின்றனவே—நம்மைக் கண்டதுமே எதிரிகள் கேலியும் கிண்டலும் பேசத் தொடங்கி விடுகின்றனரே—மறுத்துப் பேச நமக்கு வாயில்லையே—தலை குனிந்து கொண்டுதானே செல்ல வேண்டியிருக்கிறது—ஆயிரம் ஆபத்துகள் அடுக்கி வந்தாலும் அணுவளவும் அஞ்சாது அடலேறுகள் என எதிர்த்து நின்று அறப்போர் பல ஆற்றிவந்த எங்களை இந்தக் கோலத்திற்கு ஆளாக்கிவிட்டீரே, இத்தகு கொடுமைக்கு ஆளாக நாங்கள் என்ன குற்றம் செய்தோம் தலைவரே என்று, நிலைமையை, நம் கண்கள் சிந்தும் கண்ணீரால், படம் பிடித்துக் காட்டிப் பார்த்தோம்.

கட்சியின் முக்யஸ்தர்கள் பலர் நேரிலே சென்று தலைவரிடம், வேண்டாம் இந்த விபரீதத் திருமணம், விட்டுவிடுங்கள் என்று வாதாடினர்.

கட்சியில் அரும்பணியாற்றி வந்த அன்பர்கள் பலர், திருமணச் சேதி கேட்டு, உள்ளம் வெதும்பி, துடிதுடித்து அழுது, தேம்பித் திகைத்து, கூடாது கூடாது, இந்தத் திருமணம் நடைபெறக் கூடாது என்று பெரியாருக்கு முடங்கல் பல தீட்டினர்.

பெரியாரின் அருமை பெருமைகளை விளக்குவதற்கும் திராவிடர் கழக இலட்சியங்களைப் பரப்புவதற்கும் என்றே தொடங்கி நடத்தப்பட்டுவரும் நம் கழக ஏடுகள், கட்டுரைகள் தீட்டி தலைவரைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டன.

சென்னை மாவட்ட திராவிடர் கழகம் மணத்தைக் கண்டித்து தீர்

கண்ணீர் சிந்துகிறோம் நாம்—விஷமிகளென ஏசுகிறார் அவர்!

மானம் நிறைவேற்றி அனுப்பிற்று தலைவருக்கு.

சென்னை மாவட்டக் கழகம் மட்டும்தானா, இல்லை இல்லை, நாடெங்கணும் உள்ள திராவிடர் கழகங்கள், வழியும் கண்ணீரை ஒரு கரத்தால் துடைத்துக் கொண்டே, மற்றொரு கரத்தால் கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றி, பெரியார் அவர்களுக்கு அனுப்பி வைத்தன.

கழகத்தில் பெரியாருக்கு அடுத்த நிலையிலே இருக்கும் தலைவர்களும், ஏனைய முக்கிய நிர்வாகிகளும், பேச்சாளர்களும், எழுத்தாளர்களும், பிரபலஸ்தர்களும் ஒன்று கூடி, சென்ற கிழமை, ''திராவிட நாடு'' இதழிலே, இந்தத் திருமண ஏற்பாடுகளை கைவிட்டுவிட்டு இயக்கத்தைத் தொடர்ந்து நடத்தும்படி தலைவரைக் கேட்டுக்கொள்ளும் தெளிவான அறிக்கையை வெளியிட்டிருந்தனர்.

நேரிலே கேட்பது—கூட்டத்திலே தீர்மானிப்பது—இதழ்களிலே எழுதுவது—அறிக்கை மூலம் தெரிவிப்பது என்று என்னென்ன முறைகள் உண்டோ அத்தனை முறைகளாலும், தேம்பி அழும் திராவிடர்கள் தங்கள் வேண்டுகோளைப் பெரியார் அவர்களுக்குத் தெரிவித்தாகிவிட்டது.

ஒரு நாள் அல்ல! இரு நாள் அல்ல! 18 நாட்கள்!! 18 நாட்களாக நாம், நம் கருத்தை, வேண்டுகோளை, கண்டனத்தை பெரியாருக்குத் தெரிவித்து வந்திருக்கிறோம்.

நாம் என்றால் யாரோ ஒருவர் இருவர் அல்ல. திராவிடர் கழகத்தில் தீவிரப் பங்கெடுத்துப் பணியாற்றிவரும் அத்தனை பேரும் தெரிவித்து இருக்கிறோம். ஆயிரமாயிரம் தொண்டர்கள் தெரிவித்திருக்கின்றனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் தெரிவித்திருக்கின்றனர். எண்ணற்ற திராவிடர் கழகங்கள் தெரிவித்திருக்கின்றன. ஏறத்தாழ திராவிடர் கழக உறுப்பினர்கள் அத்தனை பேரும் தெரிவித்திருக்கின்றனர்—சிலர் கண்டன அறிக்கை மூலம்! சிலர் பத்திரிகைக் கட்டுரை மூலம்! சிலர் நேரில் வாய்மொழி மூலம்! ஆனால் பலர்—மிகப் பலர்—ஆயிரமாயிரவர், தாம் சிந்தும் கண்ணீர் மூலம்!

ஆம்! பெரியாரின் போக்கு தவறானது, தவறானது மட்டுமல்ல அவமானகரமானது, அவமானகரமானது மட்டுமே அல்ல நம் கட்சிக் கொள்கைகளுக்கே புறம்பானது, கட்சிக் கொள்கைகளுக்குப் புறம்பானது மட்டுமே கூட அல்ல, கட்சிக்கு என்றென்றைக்கும் மாறாத இழிவை பழியை படுகாயத்தை உண்டுபண்ணும் கோராமை நிறைந்தது என்பதை, நாம் இத்தனை பேரும் எடுத்துக்காட்டியிருக்கிறோம்.

நாம், நம் உள்ளத்தையே பிழிந்தெடுத்துத் தந்திருக்கிறோம் பெரியாருக்கு.

நம் மனதைத் திறந்து காட்டியிருக்கிறோம். ஒளிவு மறைவு இன்றி, உள்ளதை உள்ளபடி எடுத்துச் சொல்லி, இருக்கிறோம். மனதில் படிந்துள்ள வேதனையை, துயரத்தை, அவமானத்தை, பழிச்சொல்லை அப்படி அப்படியே எடுத்துக்காட்டியிருக்கிறோம்.

நாம் இவ்வளவு தூரம் பணிவுடனும் அன்புடனும் நம் வேதனையை எடுத்துச் சொல்லி, திருமண ஏற்பாட்டை நிறுத்தி விடுங்கள் என்று கெஞ்சிக் கேட்டோமே, வணங்கி வேண்டினோமே, தயவு செய்க தலைவரே என்று தாழ்ந்து பணிந்தோமே, இவ்வளவுக்கும் அவர் ஏதாவது பதில் கூறினாரா?

நம் கண்ணீரைத் துடைத்தாரா?

ஏன் இவ்வளவு வேதனை— நிறுத்தி விடுகிறேன் திருமணத்தை என்று எழுதினாரா?

என் அன்புள்ள தோழர்களே உங்கள் அனைவரின் கருத்துக்கும் மாறாகவா நான் இச் செயல் புரிந்து விடுவேன் — உங்களைக் கலந்து பேசி உங்கள் சம்மதத்தைப் பெறாமலா செய்து விடுவேன் என்று ஆறுதல் மொழியேனும் கூறினாரா?

நம் மனப்புண்ணை, வேதனையை, துக்கத்தை சிறிதாவது மதித்தாரா?

ஆயிரமாயிரம் வீரர்கள் இதோ, நாட்டில், தங்கள் தலைவரின் தகாச் செயலாலே, தலை குனிந்த வண்ணம், கண்களில் நீர் சிந்திய வண்ணம் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டதே, இந்த நிலைக்கு ஒரு பரிகாரம் தேட வேண்டும் என்று கருதவாவது செய்தாரா?

இல்லை!

இல்லை!!

இல்லை!!!

அதுபோலவெல்லாம் செய்யவில்லை பெரியார், நம் கண்ணீரைத் துடைக்கவில்லை, நம் வேதனையைப் போக்க முன் வரவில்லை, ஏன் இப்படிப் புலம்புகிறீர்கள் துடிக்கிறீர்கள், என்ன காரணம் என்று கேட்கவில்லை.

மாறாக, நம்மையெல்லாம் இழ் கண்ட சொற்களாலே அர்ச்சித்திருக்கிறார்.

சுயநலமிகள்

எதிரிகள்

விஷமப் பிரசாரம் செய்பவர்கள்

தவறான கருத்தைப் பரப்புபவர்கள்

ஆபாசமான, கீழ்த்தரமான, விஷமச் செய்திகளைக் கூறுபவர்கள்

கிளர்ச்சிக்காரர்கள்

பொதுமக்களால் உஷாராகக் கவனிக்கப்படவேண்டியவர்கள்

எந்த விஷயம் ஏற்பட்டாலும் ஒருவரை ஒருவர் அழுத்தி சுயநலம் சாதிக்கவே கூடி இருக்கிறவர்கள்

பொறாமை, ஏமாற்றம் அடைந்தவர்கள்

வேஷம் போட்டு கலவரம் செய்பவர்கள்

ஒருவருக்கொருவர் பொருத்தமற்றவர்கள்—ஒற்றுமை அற்றவர்கள்—ஒரு பொது வெறுப்பை உண்டாக்குவதன் மூலம் ஒன்று சேர்ந்து உளறிக் கூத்தாடும்படி செய்யப்பட்டவர்கள்

சுயநலத்துக்காக, ஏதோ ஒரு காரணத்தைக் கற்பித்துக் கொண்டவர்கள்

1–7–49 ''விடுதலை'' பக்கம் 2லும் 4–7–49 ''விடுதலை'' பக்கம் 2லும் வெளி வந்திருக்கின்றன நம் வேதனையை மேலும் அதிகமாக்கும் இந்த விபரீத வாசகங்கள்!

தகாச் செயல் புரிந்திருக்கும் பெரியார், இப்படிச் செய்திருக்கிறீரே இது நியாயமா என்று கேட்ட நமக்கு, சமாதானம் சொல்ல முன் வரவில்லை என்பது மட்டுமல்ல, தம் குறுந்தடியாலே நம் தலையை என்ன சேதி என்று கேட்கவும் ஆரம்பித்து விட்டார்!

வெளியே செல்ல முடியவில்லையே—கடை வீதிப்பக்கம் போக இயலவில்லையே—ஊராரின் ஏச்சு பொறுக்க முடியவில்லையே—த

(11-ம் பக்கம் பார்க்க)

நம் கண்ணீரைக் கேலி செய்கிறார்!

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

அதை நாம் எப்படிக் கண்டிக்க முடியும்?

எந்தக் காரணத்தாலாவது அவர் இந்த வழிகளில் எதையும் பின்பற்றாமல் ஒரேகாலத்தில் இரு வழிகளையும் பின்பற்ற முயல்வாரானால், அதாவது, கட்சிக் கொள்கைக்கு மாறான இத்திருமணத்தையும் செய்து கொண்டு, கட்சியிலும் தொடர்ந்திருக்க - எண்ணுவாரானால், அதை மட்டும் நாம், நாம் என்றால் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த ஆயிரமாயிரம் உறுப்பினர்கள், ஒரு கணமும் சகித்துக் கொள்ள முடியாது.

அப்படிப்பட்ட ஒரு நிலைமையைப் பெரியார் உண்டாக்கமாட்டார் என்றே நம்புகிறோம். ஒருவேளை உண்டாக்குவாரானால், நாம், கட்சியை அவரிடமிருந்து விடுவித்துக் கொள்வதற்கு என்னென்ன நியாயமான முறைகளைக் கையாளமுடியுமோ அவ்வளவையும் கையாள்வதற்கு ஒரு சிறிதும் தயங்கமாட்டோம்

கொள்கையை மீறி நடப்பவர்கள் யாராயிருந்தாலும் சரி—அவர் நம் அருமைத் தலைவர் பெரியாராயினும் சரியே, அன்றி வேறு எந்த மாவீரராயினும் சரியே—அவர்கட்கு நாம் ஒருபோதும் கட்சியில் இடம் கொடுக்கமாட்டோம்.

பெரியார் அப்படி கொள்கைக்கு மாறாக நடக்கத் துணிவாரானால் கட்சித் தலைமை அவரை விட்டு வெளிக்கிளம்பிவிடும் என்பது உறுதி. வெளிக்கிளம்பி, வேறு தக்க தலைவர் கரத்திலே சென்று தங்கும் என்பதும் உறுதி. இதற்குத் தேவையான முயற்சியில் நாம் முழுமூச்சாக ஈடுபடுவோம் என்பதும் உறுதிதான்.

கட்சித் தோழர்களிடமிருந்து நமக்கு ஏராளமான கடிதங்கள் வந்தபடி இருக்கின்றன. தலைவர் இப்படிச் செய்துவிட்டாரே இனி நாம் செய்யவேண்டிய கடமை யாது என்று பலரும்கேட்டபடி இருக்கின்றனர். வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைக்கப்பட்ட கதை போல, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக கொழு கொழுவென வளர்ந்து வந்த குழந்தை திடீரென கொடியநோயால் தாக்குண்டு திகைப்பதுபோல, வேக வேகமாகச் சென்று கொண்டிருந்த அழகிய கப்பலின் அடித்தட்டிலே திடீரென்று பெரியதோர் ஓட்டை வேண்டுமென்றே செய்யப்பட்டதைப்போல, கட்சி மடமடவென வளர்ந்து, தோழர்கட்கு தென்றலாகவும் மாற்றாருக்குச் சூறாவளியாகவும் மக்களுக்கு "சகல ரோக நிவாரணி"யாகவும் விளங்கிக்கொண்டிருக்கும் நேரத்தில் இந்தக்கேடு நேர்ந்து விட்டதே என்பதைச் சொல்லி சொல்லி நேரில்வந்து நம்மிடம் புலம்பி அழும் நண்பர்கள் பலர். கண்ணீரைக் கடிதமாக்கி கடிதங்களை நமக்கு அனுப்பி, பெரியார் பெரியார் என்று போற்றிப் போற்றி நீங்கள் எழுதினீர்களே உங்கள் எழுத்தை இனிது இனிது என்று சொல்லி நாங்கள் மகிழ்ந்தோமே, இப்போது இப்படி நேர்ந்ததே என்று கூடி அழும் தோழர்கள் எண்ணற்றோர். இந்த வேதனை நிகழ்ச்சியைக் குறித்து அண்ணா அவர்களிடமும் கட்சியின் ஏனைய முக்கிய தலைவர்களிடமும்வந்து பேசிப் பேசி, ஏற்கெனவே அவர்கள் சிந்தும் கண்ணீரை மேலும் அதிகமாக்கிச் செல்லும் இயக்கத் தோழர்கள் ஆயிரமாயிரம். நேரில் பேசவோ கடிதம்மூலம் எழுதவோகூட மனமின்றி, தனியேஇருந்து, இந்த வேதனை நிகழ்ச்சியை நினைத்து நினைத்து உள்ளம் புழுங்குவோர் பல இலட்சம். இவர்கள் அனைவர்க்குமே அன்புடன் தெரிவித்துக் கொள்ள ஆசைப் படுகிறோம்:

தூய்மை உள்ளம் படைத்த தோழர்களே, கட்சியின் மீது பேரன்புகொண்ட நண்பர்களே, புத்தறிவும் புது ஒளியும் புது வாழ்வும் நாடெங்கும் பரவ வேண்டும் என்பதில் அடங்காத ஆசை படைத்த அன்பர்களே, கலங்க வேண்டாம். கண்ணீர் சிந்திக் கதறி அழவேண்டாம். வேதனை வேதனை என்று சொல்லி விம்ம வேண்டாம். இப்படியும் நடந்ததே என்று சொல்லிச் சொல்லி வருந்த வேண்டாம். நம் கண்ணீரை, வேதனையை, உள்ளத்துடிப்பை, மனவாட்டத்தைக் கண்டால் கல் நெஞ்சமும் கரைந்துவிடும். ஆனால் நம் தலைவரோ நாம் வேதனைத் தேளால் கொட்டப்பட்டு வாட்டமுற்றுக் கிடக்கும் இந்த நேரத்திலேயே, இதற்காகவே, நம்மை விஷமிகள் என்று தூற்றுகிறார். சுயநலமிகள் என்று ஏசுகிறார். உளறித்திரியும் உன்மத்தர்கள் என்று "ஒற்றுமைத் தத்துவம்" பேசுகிறார். **ஆம் நம் கண்ணீரைக் கேலி செய்கிறார். நம் வேதனையை "ரப்பர் பாம்பு" என்கிறார்.** எனவே இனி நாம் புலம்பிப் பயனில்லை. அவரிடம் கெஞ்சியும் இரங்கியும் குறையிரந்தும் பயனில்லை. வேண்டுகோளும் விம்மல் ஒலியும் இனியும்பலன் தரும் என்று யாரும் எண்ணத் தேவையில்லை. வேண்டாம் நண்பர்களே புலம்பவேண்டாம். நம் புலம்பலை அவர் பொருட்படுத்தவில்லை. நம் கண்ணீரை அவர் மதிக்கவில்லை. நம்உள்ளம் உரைக்கும் உத்தமச் சொற்களை அவர் "**விஷமிகளின் பிரசாரம்**" என்று எழுதுகிறாரே தவிர,

(10-ம் பக்கம் பார்க்க)

மணியம்மைதான் வார்சு என்று சொல்லவே இல்லையாம்!

(12-ம் பக்கம் தொடர்ச்சி)

மைப் புரட்டர்கள் என்று சொல்லாமல் சொல்லுகிறாரே—அதை மட்டும் நம்மால் சகித்துக் கொண்டிருக்க முடியாது. "திராவிடக் கழகத்திற்கு வாரிசு நியமிப்பது பற்றி நான் குறிப்பிடவே இல்லை—இது எதிரிகளின் (அதாவது நம்) விஷமப் பிரசாரமே தவிர வேறில்லை" என்று பெரியார் இப்போது கூறுகிறாரே, இது, உண்மைக்கு முற்றிலும் மாறானது என்பதை நாம் ஆயிரம் மேடைகளிலிருந்து வேண்டுமானாலும் கூறத்தயங்கோம்.

"இயக்க விஷயத்தில் இதுவரை அலைந்ததுபோல் அலைய உடல் நலம் இடம் கொடுக்கவில்லை என்றும், என்னைப்போல் பொறுப்பு எடுத்துக்கொள்ளத்தக்க ஆள் யார் இருக்கிறார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை உள்ளவர்கள் கிடைக்கவில்லை என்றும், ஆதலால் எனக்கு வார்சாக ஒருவரை ஏற்படுத்தி அவர் மூலம் ஏற்பாடு செய்துவிட்டுப் போகவேண்டுமென்று அதிக கவலை கொண்டு இருக்கிறேன் என்றும் கோவை மாநாட்டில் சொல்லி இருக்கிறேன்."

விடுதலை 19—6—49 பக்கம் 2

"........என்னைப் பற்றியும், இயக்கத்தைப் பற்றியும், இயக்க நடப்பைப் பற்றியும், எனக்குப் பின்னும் ஒரு அளவுக்காவது இயக்கம் நடைபெற வேண்டும் என்பது பற்றியும் ஏதாவது ஒரு வழி செய்யவேண்டியதைப்பற்றி மிகக் கவலையுடனும் பற்றுடனும் சிந்தித்து நடக்கவேண்டியவனாக இருக்கிறேன்......**இதற்காக** என் அனுபவத்தைக் கொண்டு எனக்குத் தோன்றியதை நான்செய்துமுடிக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறேன். சற்றேறக் குறைய ஒரு முடிவுக்கும் வந்துவிட்டேன்......... எனது இலட்சியத்தின் நன்மை, இயக்கத்தின் நன்மை என்பதைக் கருதி இயக்கத்துக்கு ஆக சில ஏற்பாடுகள் செய்ய முன் வந்துவிட்டேன்......மணியம்மையை எப்படியாவது வார்சுரிமையாக ஆக்கிக்கொண்டு...மற்றும் சுமார் 4, 5 பேர்களையும் சேர்த்து, இயக்க நடப்புக்கும் பொருள் பாதுகாப்புக்கும் ஒரு டிரஸ்ட்டு பத்திரம் எழுத ஏற்பாடு செய்திருக்கிறேன்......

"விடுதலை 29—6—49

இந்த வாக்கியங்களிலிருந்து, இந்த வாக்கியங்கள் எழுதப்பட்டபோது, பெரியாருக்கு இருந்த எண்ணம், திருமதி மணியம்மையாரை தனக்கு வார்சாக நியமித்துக் கொள்வதோடு இல்லாமல் இயக்க நடப்புக்கும் வார்சாக நியமிப்பது தான் என்பது தெளிவாகத் தெரிகிறது. அந்த எண்ணம் அவருக்கு இப்போது மாறியிருக்கலாம். அந்த மனமாற்றத்திற்கு திராவிடர்கழகப் பொதுமக்களின் ஏகோபித்த எதிர்ப்பே காரணமாகவும் இருக்கலாம், அநேகமாக அப்படித்தான் இருக்கும். அவர் மனமாற்றம் அடைந்தது தவறு என்றும் நாம் கூறவில்லை. அவர் மனமாற்றம் அடைந்து இந்தத் தவறான ஏற்பாடுகளைக் கைவிடவேண்டும் என்பதுதானே நம் ஆசைகூட! ஆனால் அப்படி மனமாற்றம் அடைந்திருக்கும் அவர் மனமாற்றம் அடைந்துவிட்டேன் என்று வெளிப்படையாகக் கூறி நம் பாராட்டையும் வாழ்த்துதலையும் பெறாமல், நான் முன்னரேயே அப்படிக் கூறவில்லை என்று ஏன் எழுத வேண்டும்? "(இயக்க விஷயத்தில்) என்னைப்போல் பொறுப்பு எடுத்துக்கொள்ளத்தக்க ஆள்யார்இருக்கிறார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை உள்ளவர்கள் யாரும் கிடைக்கவில்லை, ஆதலால் எனக்கு வார்சாக ஒருவரை ஏற்படுத்தி, **அவர் மூலம்** (இயக்க நடப்புக்கு) ஏற்பாடு செய்துவிட்டுப் போக இருக்கிறேன்" என்று எழுதி, பிறகு, அந்த "அவர்" மணியம்மையார்தான் என்பதையும் கூறியிருக்கிறாரே பெரியார், இந்த "அவர் மூலம் இயக்கம் நடக்கவேண்டும்" என்ற வாசகத்திற்கு மணியம்மையார் மூலம் இயக்கம் நடக்கவேண்டும் என்றுதானே பொருள்? ஆம் என்றால், அதாவது மணி அம்மையார் மூலம்தான் இயக்கம் நடக்க வேண்டும் என்றால், அந்த அம்மையார் கட்சிக்கு வார்சு ஆகிறார் என்றல்லாமல் அந்த நிலைமையை வேறு என்ன வென்று கூறுவது? ஒருவேளை, பெரியார், தமக்குள்ள சிறந்த அறிவுத்திறமை காரணமாக இந்த வாசகத்திற்கு ஏதேனும் புது வியாக்யானம கூறுவார் போலும்!

கட்சியை நடத்திச் செல்வதற்கான உரிமையை மணி அம்மையாருக்குத் தருவதாக நான் சொன்னதே கிடையாது என்று "விடுதலை"யில் எழுதி இருப்பதைப் போலவே, கட்சிப் பணத்தை அம்மையாருக்குத் தருவதாகவும் நான் சொன்னது கிடையாது என்றும், என் சொந்தப் பணத்திற்குத்தான் அந்த அம்மையார் உரிமையாளராக ஆகப் போகிறார்கள் என்றும் "மெயில்" நிருபரிடம் கூறியதாக "மெயில்" ஏடு தகவல் தந்துள்ளது. இது உண்மையானால் இந்தத் தகவலை நாம் மனப்பூர்வமாக வரவேற்கிறோம்.

பெரியார் இப்போது இதுபற்றிக் கூறுவது முன்னே கூறியதற்கு நேர் முரணாக இருக்கிறது என்பதைப்பற்றி நாம் எடுத்துப் பேசக்கூட விரும்பவில்லை. கட்சிப் பணத்தை மணி அம்மையாரிடம் தரப் போவதில்லை என்று பெரியார் இப்போது கூறுவது முற்றிலும் சரி என்ற அளவில் நம் பேனாவை நிறுத்திக்கொள்ள நமக்கு முழுச் சம்மதம்.

பெரியாரின் தனிப்பட்ட சொத்தை என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ள அவருக்கு முழு உரிமை உண்டு. கட்சிப் பணத்தைப் பொறுத்த வரையில்தான் நாம் பேசமுடியும், பேச வேண்டும், அதுதான் முறை.

கட்சிப் பணத்தை மணி அம்மையாருக்குத் தருகிறாரா இல்லையா என்பது மட்டுமல்ல பிரச்சினை, கட்சிப் பணத்தின் எதிர் காலத்தை வேறு எந்த விதத்தில் நிர்ணயிப்பதற்கும் பெரியாருக்கு தனிப்பட்ட முறையில் சிறிதளவும் உரிமை கிடையாது. அவருடைய நோக்கம் எவ்வளவு சிறந்ததாக இருந்தாலும் சரி, அவர் கட்சிப் பணத்தைக் காப்பாற்றுவதற்காக வகுக்கவிருக்கும் முறை எத்தனை அற்புதமானதாக அமைந்திருந்தாலும் சரி, கட்சியைக் கலவாமல், கட்சி மக்களைக் கேளாமல், கட்சியின் சம்மதத்தைப் பெறாமல், அவர், தன் இச்சையாக, கட்சிப் பணத்தை **எந்த வித ஏற்பாட்டுக்கு உள்ளாக்கினாலும்** அது தவறுதான்; நிச்சயமாகத் தவறுதான்.

மணி அம்மையாரின் உண்மை வயது 30 என்றும், சில "விஷமப் பிரசுரங்கள்" செய்யும் பிரசாரத்தால் சிலர் அந்த அம்மையாரின்

அம்மையின் வயது முப்பதாம்! சரி! அதனால்......?

வயது 20க்கும் கீழ் என்று கருதுவதாகவும், அதுபோலவே அந்த அம்மையார் விதவை என்பதாக சிலர் பிரசாரம் செய்திருக்கிறார்கள் என்றும் பெரியார் விடுதலையில் எழுதி இருக்கிறார்.

மணி அம்மையாரை விதவை என்று யாரும் கூறியதில்லை. சென்ற கிழமை "திராவிட நாடு" இதழில் வெளி வந்திருக்கும் அறிக்கையில் கையெழுத்திட்டுள்ள முக்யஸ்தர்கள், யாரும் அப்படிக் கூறியிருக்கக் கூடியவர்கள் அல்ல. நம் "போர்வாளிலும்" அது போன்ற பொய்த்தகவல் ஏதும் வரவில்லை. நாம அறிந்தவரை, பொது மக்களிடையேயும் அப்படிப்பட்ட வதந்தி எதுவும் உலவவில்லை.

வயதைப் பொறுத்த வரையில், முக்யஸ்தர்கள் அறிக்கை, அம்மையாருக்கு வயது 26 என்று கூறுகிறது. நாம், போர்வாளில், "26 அல்லது 27 இருக்கும்" என்று எழுதி இருந்தோம். அப்படி எழுதி இருப்பதிலேயே வயதைப்பற்றிய ஒருவித சந்தேகத்தொனி ஒலிப்பதை எவரும் அறிவர். வயது 26 அல்லது 27 இருக்கும் என்று நாம் எழுதியது ஒரு குத்துமதிப்புத்தான். ஏறத்தாழ என்று கூறுவார்களே, அந்தப் பாணியைச் சேர்ந்த ஒரு கணக்குத்தான். இப்போது பெரியார், அம்மையாரின் வயது 30 என்று தெரிவித்திருக்கிறார். நல்லது! அப்படியே இருக்கட்டும். அம்மையாரின் வயது 27 அல்ல, 30 என்பதை மறு பேச்சு இன்றி ஒப்புக் கொள்கிறோம். ஆனால் அம்மையாரின் வயது 27 அல்ல, 30, என்பதாலேயே பொருந்தாத் திருமணம் பொருந்தும் திருமணமாக மாறிவிடுமா என்பதுதான் நம் கேள்வி.

பெரியாருக்கு வயது 72. அம்மையாருக்கு வயது 27. இந்த நிலையில் இருவரும் திருமணம் செய்து கொள்வது பெரியாரும் நாமும் இதுவரை செய்து வந்த பகுத்தறிவுப் பிரசாரத்திற்கு நேர் மாறாக இருக்கிறதே, ஊரும் உலகமும் சிரிக்கிறதே இதைக் கேட்டு, ஏன் இந்த விபரீதம் புரிகிறார் தலைவர், நம்மால் நாட்டில் நடமாட முடியவில்லையே என்று மனம் நொந்து கூறினோம் நாம்.

"அம்மையார் வயது 27ஆ! எந்த விஷமி கூறினான் அப்படி? அம்மைக்கு வயது 30 முடிந்துவிட்டதே, தெரியாதா அந்த வீணர்களுக்கு?" என்று வீரமுழக்கம் புரிகிறார் பெரியார்.

நம் கேள்விக்குப் பதில் இது தானா?

"27–72! பொருந்துமா?" என்று நாம் கேட்டால் 27 அல்ல 30 என்று பதில் கூறிவிட்டால் போதுமா? 30–72! இதுமட்டும் பொருந்துமா? 30 வயதுள்ள இளமங்கை, வாழ்வின் 'ருசி' இன்னது என்பதையே இதுவரை அறியாத இளமங்கை 72 வயதான முதுபெரும் கிழவனாரைத் திருமணம் செய்துகொள்வது பொருத்தமான காரியம் என்று பெரியார் கருதுகிறாரா?

வயது 27 அல்ல 30 என்று கூறிவிடுவதாலேயே, தாம் செய்யும் தவறு மறைக்கப் பட்டுவிடும் என்று பெரியார் நம்புகிறாரா?

அம்மையின் வயது 27 என்று சொன்னால்தான் திராவிடர் கழகத் தோழர்கள் பதறிய நெஞ்சுடையராய், நீர் சிந்தும் கண்ணினராய், நடுங்கும் உடலினராய் இருப்பர், அம்மையின் வயது 30 என்று தெரிந்துவிட்டால், பிறகு, கழகத்தவர்தம் மனமெல்லாம் பூரித்துப் போகும் என்பது பெரியார் நினைப்பா?

"ஏனையா பகுத்தறிவு சிங்கம்! இங்கே வாருமையா திராவிடர் கழகத் தங்கம், சீர்திருத்தம், பகுத்தறிவு, பெண்ணுரிமை, என்று ஏதேதோ பேசினீரே! இதோ உம் தலைவர் 72 வயதில் 27 வயது பெண்ணை மணக்கிறாரமே! இதற்கு என்னய்யா சமாதானம் கூறுகிறீர்?" என்று, மாற்றுக் கட்சியினர், நாம் வீதி வழியே செல்லும்போது, நம்மீது சொல்லம்பு தொடுக்கின்றனரே, அவர்களைப் பார்த்து, அல்ல அல்ல சார்! மணமகளுக்கு வயது 30 என்று கூறிவிட்டால், அது சரியான பதில் ஆகுமா? அல்ல, நாம்தான் அப்படிக் கூறிடமுடியுமா?

"சுயமரியாதை இயக்கம் சுயமரியாதை இயக்கம் என்று பேசினீர்களே இதுதானா மின்டர் அது? 72 வயதுக்கு 27 வயது ஜோடி!" என்று கேலி பேசுகிறார்களே ஊரார், அந்தக் கேலி, அம்மையின் வயது 30 என்ற சிறு திருத்தத்தால் சிறிதளவும் குறையாதே!

கொள்கை உறுதியிலிருந்து நம் தலைவர் வழுவிவிட்டார் என்று நாடெங்கும் பேசப்படும் கிண்டல் பேச்சு, கேளுமையா, வயது—30 என்ற சொல் வீச்சால் மாறாதே!

ஊரில் உலவும்போது குனிந்த தலை குனிந்தபடி நாம் போக வேண்டி இருக்கிறதே, அவமானத்தின் சின்னங்களாக, வெட்கத்தின் உருவங்களாக, துக்கத்தின் வடிவங்களாக, அந்த நிலை "இந்த முப்பதால்" தீராதே!

திராவிடர் கழகம் என்ற மாசு மருவற்ற புனிதமான இயக்கத்தின் பெயர்மீது தலைவரின் பொருந்தாத் திருமணம் என்னும் இந்த மாசு படிந்ததால் ஏற்பட்டுள்ள களங்கம் "27 அல்ல 30" என்ற துணியால் துடைத்தாலும் மறையாதே!

நீங்காத பழி — மாறாத வடு — துடைக்கப்பட முடியாத மாசு— அழியாத களங்கம்—தீராத அவமானம் என்றெல்லாம் எழுத்தாளர்கள் எழில்பட இயம்புவார்களே, அப்படிப்பட்ட தீ நிலையை அல்லவா இந்தத் திருமணம் திராவிடர் கழகத்திற்குத் தேடித் தந்து விட்டது! இந்தத் தீ நிலையை வயது 30 என்ற சிற்றுளியா தகர்த்துவிடும்? முடியுமா? நடக்குமா? உண்டா அவ்வளவு ஆற்றல் இந்த "முப்பது"க்கு?

கொள்கைக்கு மாறான திருமணம்—ஏன் பெரியார் அதிலே அவ்வளவு உறுதி காட்டுகிறார்?

நம் இயக்கத்தின் வளர்ச்சிக்கு மரண ஓலை போல வந்துள்ள திருமணம் — இதை நிறுத்திவிடக் கூடாதா பெரியார்?

நாம் இத்தனை ஆயிரம் பேர் கண்ணீர் சிந்துகிறோமே — இந்தக் கண்ணீர் அவர் சித்தத்தை மாற்றாதா?

இழிவும் பழியும் வீணாக நம்மைத் தேடி வருகின்றனவே, அவற்றை வீழ்த்தும் வழி நன்கு தெரிந்திருந்தும் ஏன் பெரியார் அவ்வழி செல்ல மறுக்கிறார். ஏன் திருமணத்தை விட முடியாது என உரைக்கிறார்?

இயக்கம் வளரக்கூடாது என்பது அவர் ஆசையா—இருக்கமுடியாதே!

கட்சியில் பிளவும் பேதமும் பெருக வேண்டும் என்பது அவர் எண்ணமா—ஒரு போதும் இராதே!

நாம் வேதனைப்படுகிறோம்! அவர் ஆனந்தப்படுகிறார்!

அவரும் நாமும் பிரிந்துபோக வேண்டியேதான் இப்படிச் செய்கிறாரா—அப்படி இருக்கும் என்று எண்ணவும் முடியாதே!

என்றாலும் அவர் செயலின் விளைவு இப்படியெல்லாம்தானே முடிந்து விட்டது!

"தினச்செய்தி"யின் பத்திரிகை நிருபர் அவரைப் பேட்டிகண்டு, "உங்கள் திருமணத்தை ஏற்க மறுத்து அண்ணாதுரை முதலானவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்களே! இதுபற்றி உங்கள் கருத்தென்ன!" என்று கேட்டபோது அது என் சொந்த விஷயம் என்று சிரித்துக்கொண்டே கூறினாராமே! இதை, பத்திரிகையில் படிக்கும்போது, நம் நெஞ்சு பிளந்துவிடும்போல் இருந்ததே!

திருமணத்தைப் பற்றி நினைத்தாலே நம் மனம் வெந்து கருகுகிறது, அவரோ அதைப்பற்றி நினைப்பூட்டப்பட்டதும் சிரித்துக்கொண்டே பேசுகிறார்!

நாம்வேதனைப்படுகிறோம்—அவர் ஆனந்தப்படுகிறார்.

நாம் கண்ணீர் சிந்திக் கதறி அழுகிறோம்—அவர் களிப்பு மிகக் கொண்டு சிரித்து மகிழ்கிறார்.

ஐயோ திருமணமா என்கிறோம் நாம்! ஆம் பதிவுத் திருமணம் என்று பெருமையுடன் பேசுகிறார் அவர்.

ஊருக்கு உபதேசிகள் நீங்கள் என்று எதிரிகள் ஏசக் கேட்டு நெஞ்சு திடுக்கிடுகிறோம் நாம்—அவரோ இந்த வயதில் இதற்குத் திருமணம் என்று பெயரா என்று, சாமர்த்தியமாகப் பேசுவதாக எண்ணிக்கொண்டு சத்தற்ற வாசகத்தை வீசுகிறார்.

இங்கே பெருமூச்சு—அங்கேபுன்னகை! இங்கே வாட்டம், வருத்தம், வேதனை, அழுகுரல்—அங்கே மகிழ்ச்சி, மகிழ்ச்சி, மகிழ்ச்சி, மகிழ்ச்சி!!

நாம் அழ அழ, அவர் சிரிக்கிறார். நம் அழுகை அவருக்குச் சிரிப்பைத் தருகிறது.

எவ்வளவு வேதனை மிகுந்த நிலைமை!

நாம் தேள் கொட்டியது போலத் துடிக்கிறோம்—அவரோ நமக்குப் பதில் கூறுவதே வீண் காலக்கேடு என்று துணிச்சலாக எழுதுகிறார்.

எத்தகைய விபரீதமான உறவு உடையவர்களாக இருக்கிறோம் நாம் இருவரும்!

"நமது கண்ணீரும் கண்டனமும் விலகிநிற்கிறோம் என்ற உறுதியும் அவருடைய உள்ளத்தை மாற்றினால் நாம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அவருடைய மலரடியின் கீழ் நின்று மீண்டும் பணிபுரிவோம்" என்று நாம் எவ்வளவோ பணிவாக, எவ்வளவோ அடக்கமாக, கல்மனமும் கசியும் விதத்திலே முறையிட்டோம்!

சுயநலமிகள், எதிரிகள், காற்றடிக்கிற பக்கம் நின்றுகொண்டு தூற்றுபவர்கள், விஷமப் பிரசாரம் புரிகிறார்கள்—இது இயற்கை என்று அவர் மிக அலட்சியமாக, மிக அனாவசியமாக, யாரையோ பார்த்துக் கூறுவது போலப் பதில் கூறுகிறார்!

வேற்றுக் கட்சித் தலைவர்கள் இதுபோலக் கூறினால் "களத்திற்கு வாரும்—போரிடுவோம்" என அறைகூவி அழைக்கலாம். இப்போது, இப்படியெல்லாம் நம்மைப் பார்த்துத் தூற்றுபவரோ நம் தலைவர்! இதற்கு யாரை நோவது! எங்குப் போய் முறையிடுவது இந்த அக்கிரமத்தை! யாரிடம் கூறி அழுவது!

எப்படியோ, என்ன காரணத்தைக் கூறியோ, எந்த வார்த்தைகளுக்கு எந்தப் புது வியாக்யானம் கற்பித்தோ, எந்த விதமாகவோ, மணியம்மையை கட்சியின் எதிர்கால வார்சாக் ஆக்குவது என்ற திட்டத்தையும், மணியம்மையாரிடம் கட்சிப் பணத்தை ஒப்படைப்பது என்ற எண்ணத்தையும் பெரியார் கைவிட்டுவிட்டதாகத் தெரிகிறது. இதேபோல, இன்னமும் சிறிது விட்டுக்கொடுத்து இந்தத் திருமண ஏற்பாட்டையும் கைவிட்டுவிட்டு, நம்முடன் கைகுலுக்க முன்வருவாரானால், மிக நல்லது, என்றும் போல் அவர்தம் தலைமையின் கீழிருந்து பணியாற்றுவோம். அவர்தம் கடைசிக் காலத்தில் அவர்தம் பெருமைக்குரிய "சிஷ்யர்"களாக இருந்து அவர்தம மனம் மகிழ, அருந் தொண்டு புரிவோம்.

இல்லை, அது முடியாது, எந்தக் காரணத்தை முன்னிட்டும் திருமணத்தை நிறுத்த முடியாது என்று பெரியார் கருதுவாரானால், மிக மிகப் பணிவுடன் அவருக்குத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறோம், பெரியார் அவர்கள், தாமாகவே, தம் இச்சையாகவே, கட்சியைவிட்டுவிலகி, வெளியே சென்று தம் மனதிற்குப் பிடித்த மணியம்மையாரை மணந்து, தம் சொந்த சொத்தை அந்த அம்மையாருக்கு எழுதிவைத்து, அந்த அம்மையாருடன் ஏர்க்காடு போன்ற ஏதேனும் ஓர் அமைதியான இடத்திற்குச் சென்று, சாந்தமான—நிம்மதியான—முழு ஓய்வு நிறைந்த—அரசியல் போராட்டச் சிக்கல்கள் சண்டைகளைப் பற்றிய கவலையே அற்ற சாந்தி வாழ்க்கையை வாழ்வது தான், அன்னார் கடைப்பிடிக்க வேண்டிய நியாயமான வழி, செம்மையான வழி, பெருந்தன்மையான வழி, ஒரே வழி, நல்வழி!

பெரியார் அவர்கள் 1919ல் பொது வாழ்வில் ஈடுபட்டார்கள். இது 1949! இந்த முப்பது ஆண்டுகளாக பெரியார், தென்னாட்டிலேயே, ஏன் இந்தியாவிலேயே வேறு எந்தத் தலைவரும் ஆற்றாத அளவு பெரும்பணி ஆற்றியிருக்கிறார்கள். இன்றைய தினம் உருவாகி வரும் புதிய தமிழகத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் முதற் பெரும் காரணகர்த்தா பெரியார் தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. நீண்ட காலமாக பகுத்தறிவு மழையின்றி மூட நம்பிக்கைத் தணலில் வெந்து வெந்து வெறும் கட்டாந் தரையாகக் கிடந்த தமிழகத்தை இந்த மாபெரும் தலைவர்தான் சுயமரியாதை இயக்கம் எனும் ஏர் கொண்டு உழுது அரும் பாடுபட்டு புத்தம் புதியதோர் பகுத்தறிவுப் பண்ணையாக மாற்றி அமைத்து மறு கோலம் செய்தவர். பெரியார் எனும் பெரும் புயல் சென்ற முப்பதாண்டுகளாக தமிழகத்தில் சுழன்று சுழன்று வீசாமல் இருந்தால் மத மமதையும் வர்ணாஸ்ரமக் கொடுமையும் ஆரிய மாயையும் ஆணவக்காரர்களின் சேட்டைகளும் பழமைப் பித்தும் தலைவிதிக் கொடுமையும் இன்று பெற்றிருப்பதைப் போல இவ்வளவு விரைவில் தம் மரண தண்டனையை ஒருக்காலும் பெற்றிருக்கமாட்டா. இவ்வளவு அரும்பெரும் பணியாற்றிய ஒரு சீர்திருத்தச் சிங்க ஏறு, தம் கடைசிக்காலத்தில், 72 வயதுப் பருவத்தில், என்ன காரணத்தாலோ

கட்சியா திருமணமா எதை விரும்புகிறார் தலைவர்?

30 வயது மங்கை ஒருத்தியுடன், தம் கொள்கைகளுக்கு முற்றிலும் மாறான முறையில் திருமணம் செய்துகொள்ள விரும்பினால், அதை, சீர்திருத்தப் பிரசார இயக்கமென்று அவரால் ஆசையுடன் அழைக்கப்படும் ஓர் இயக்கத்தில் இருந்து கொண்டே செய்துகொண்டு அந்த இயக்கத்திற்கு நீங்காத பெரும் பழியை தாமே கொண்டு வந்து சுமத்துவதைவிட, இயக்கத்தை விட்டு வெளியே சென்று செய்து கொண்டு, ஓய்வாக இருந்து, அமைதியாக வாழ்வதுதான் சிறப்பு!

முப்பது ஆண்டுக் காலம் ஓயாமல் உழைத்து அரும்பணி ஆற்றி நாட்டு மக்கள் அனைவருடைய உள்ளத்தையும் கவர்ந்த ஒரு தலைவர் வாழ்வின் இறுதி நாட்களில் இது போன்ற ஒரு மகத்தான தவறைச் செய்யநேர்ந்தால் அவர் பொதுவாழ்வைவிட்டுவிலகிவிடுவதே பெருந்தன்மை மிகு செயல், கண்ணியமான மார்க்கம்.

பெரியாருக்கு ஓய்வு தேவை. நிச்சயமாகத் தேவை. முப்பது ஆண்டுக்காலம் தொடர்ந்து பணியாற்றிடும் எந்தத் தலைவரும் வாழ்வின் மாலை நேரத்தில் ஓய்வாக இருக்க வேண்டியது அவசியம். எந்தத் தலைவருக்குமே இது அவசியம் என்றால் ஓய்வு ஒழிவு என்பதின்றி, அலுப்புச் சலிப்பு என்பது அறியாது, சோர்வு சோகம் என்பதையே உணராது, கட்டிளங்காளையாக இருந்தபோது தொடங்கிய பொதுப் பணியை நரைத்துத் திரைத்து மூத்துப் பழுத்த பழமாக இருக்கும் இந்தத் தள்ளாத பருவம் வரை தொடர்ந்து நடத்திவந்த பெரியார் அவர்களுக்கு ஓய்வு இந்த இறுதிக் காலத்தில் எவ்வளவு அவசியம் என்பதை நாம் கூறவே தேவையில்லை.

பெரியாருக்கு ஓய்வும் அவசியம் தேவையாக இருக்கிறது. கட்சிக் கொள்கைக்கு மாறாக உள்ள, கட்சி மக்கள் அனைவராலும் வெறுக்கப்படுகிற திருமண ஏற்பாட்டையும் அவர் கைவிடத் தயாராக இல்லை. எனவேதான் நாம் கூறுகிறோம், பெரியார் அவர்கள் கட்சிக்கு வெளியே சென்று, மணியம்மையை மணந்து, ஓய்வு பெற்று வாழட்டும். அவர் விட்டுச் செல்லும் பணியை, நாம், இளைஞர்கள், அவராலே பயிற்சி தரப்பட்டு எத்தகைய கடும்பணி புரியவும் தேர்ச்சி பெற்றுள்ள தொண்டர்கள், தொடர்ந்து நடத்துவோம்—பெரியாரின் சித்தம் களிக்கும் விதமாக!

10-7-49 ஞாயிறன்று காலை, திருச்சியில், தலைமைத் திராவிடர் கழக நிர்வாகத் தலைவர் தோழர் டி. பி. வேதாசலம் அவர்களால் கூட்டப்பட்டு கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் நடைபெற இருக்கிறது. அந்தக் கமிட்டிக் கூட்டத்தில் தலைவர் பெரியாரின் போக்கால் கட்சிக்கு ஏற்பட்டுள்ள அவமானகரமான நிலைமைக்கு எப்படிப் பரிகாரம் தேடுவது என்னும் பிரச்சினை ஆலோசனைக்கு வர இருக்கிறது. அந்தக் கூட்டம் கூடுவதற்குள், பெரியார், ஒன்று, தாம் செய்து கொள்ளவிருக்கும் பொருந்தாத் திருமணத்தையும் அதைத் தொடர்ந்து அவர் செய்யவிருக்கும் ஏற்பாடுகளையும் முற்றிலும் கைவிட்டுவிட வேண்டும். இல்லையேல் — இதுவும் அந்தக் கூட்டம் கூடுவதற்குள் செய்யப்பட வேண்டிய செயலேதான்—பெரியார், கட்சியைவிட்டு விலகிவிட வேண்டும்.

பெரியார் அவர்கள், இந்த இரண்டு வழிகளில்தான் எதையேனும் ஒரு வழியைத் தெரிந்தெடுத்தாக வேண்டும். வேறு வழி கிடையாது, இவர் போக! நிச்சயமாகக் கிடையாது.

இரு வழிகளில் அவர் போக இருக்கும் வழி, எவ் வழி?

திருமணத்தை நிறுத்தி விடுவதா? அல்லது கட்சியைவிட்டு விலகிவிடுவதா? எவ் வழி?

இந்த இருவழிகளையும் விட்டுவிட்டு, அவர் வேறு குறுக்கு வழி எதையேனும் தேடுவாரானால், அப்போது கட்சி, தானாகவே அவர் கரத்திலிருந்து வழுவிச் சென்றுவிடும். அப்படி நேரிடும்படி அவர் நடந்துகொள்வது அவருடைய இறந்தகாலப் புகழுக்கு அவரே பேரிழுக்கினைத் தேடுவதாகவே வந்துமுடியும்.

எனவே பெரியார் குறுக்கு வழி எதனையும் கடைப்பிடிக்க முடியாது — கடைப்பிடிக்கவும் கூடாது.

கட்சியா, திருமணமா, எது வேண்டும் என்பதைத் தான் பெரியார் இப்போது தீர்மானித்துவிடவேண்டும். திருமணம் வேண்டுமானால், அவர், கட்சியை விட்டுவிலகிவிடவேண்டும். கட்சி அவருக்குத் தேவையானால், அவர், திருமணத்தைக் கைவிட்டு விடவேண்டும்.

கட்சியா, திருமணமா, எதன் மீது அவருக்கு அதிகக் காதல் அல்லது எது அவருக்கு முக்கியம் என்பதைத் தீர்மானித்துக் கொள்ளவேண்டிய பொறுப்பு முற்றிலும் அவரைச் சார்ந்தது.

நம்முடைய ஆசை, விருப்பம் அவர் இந்தப் பொருந்தாத் திருமணத்தைக் கைவிட்டுவிட்டு கட்சியிலே இனியும் இருக்க வேண்டும் என்பதுதான் ஆனால் அவருடைய ஆசை, விருப்பம், என்னவாக இருக்கும் என்பது நமக்குத் தெரியாது.

அவருடைய ஆசை திருமணத்தை விட்டுவிட்டுகட்சியில் இருப்பது என்பதாக இருந்தால்—நாம் பாராட்டுவோம், மகிழ்வோம், பெருமிதம் அடைவோம்.

ஒருக்கால், அவருடையவிருப்பம் கட்சியைவிட்டு விலகி இந்தத் தவறான திருமணத்தைச் செய்து கொள்வதாக இருந்தால்—? நாம் வருத்தப்படுவோம், சங்கடப்படுவோம், ஒப்பற்ற தலைவரை உயிருடன் இழந்து விட்டோமே என்று வேதனைப்படுவோம். ஆனால் அவரைக் கண்டிக்கமாட்டோம். கட்சியைவிட்டு விலகிய பிறகு, கட்சிக் கொள்கைக்கு மாறாக அவர் நடந்து கொண்டால்

(3-ம் பக்கம் பார்க்க)

பெரியார் போக்கு: மக்கள் மனக்கொதிப்பு!

நாடெங்கும் திராவிடர் கழகத் தீர்மானங்கள்!

பெரியார் அவர்களின் பொருந்தாத் திருமண ஏற்பாட்டையும் அதன் தொடர்பாக அவர் செய்ய இருக்கும் ஏனைய ஏற்பாடுகளையும் உடனடியாக அவர் கைவிட வேண்டும் என்று வற்புறுத்தி நாடெங்கும் உள்ள திராவிடர் கழகங்கள் இந்த ஒரு வாரகாலமாக தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்பிய வண்ணம் இருக்கின்றன. தினம் தினம் இத்தகைய தீர்மானங்கள் "போர்வாள்" நிலயத்திற்கு வந்து குவிந்தவண்ணம் உள்ளன. இரண்டொன்றை மட்டும், மக்களின் மனநிலையை அனைவரும் அறிவதற்காக, இங்கு வெளியிட்டிருக்கிறோம்.

திராவிட வாலிபர் கழகம் தூத்துக்குடி (வடக்கூர்)

1-7-49 அன்று இக்கழகக் கமிட்டிக் கூட்டம் கழகத் தலைவர் தோழர் வெற்றிவேல் தலைமையில் கூடி கீழ்க்கண்ட தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றியது.

1. நமது இயக்கத் தலைவர் பெரியார் அவர்கள் 28-6-49 "விடுதலை'யில் ஈ. வெ. ரா. அறிக்கை என்ற தலைப்பின் கீழ் வெளியிட்ட விஷயங்கள் நம் கொள்கையின் முற்போக்கிற்கும் வளர்ச்சிக்கும் பெரிதும் முரண்பாடாக இருப்பதும் தவிர, பகுத்தறிவைப் படுகுழியில் வீழ்த்துவதாகவும் இருப்பதால் மேற்படி அறிக்கையை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

2. பெரியார் அவர்கள் தனது தள்ளாத வயதில் இளம்பெண், மணியம்மையாரை, தனது வார்சாகத் திருமணம் செய்து கொண்டால் பொதுமக்கள் அளித்த நிதியைக் காப்பதற்கு ஏதுவாகு மென்று எழுதுவது இயக்க அபிமானிகளை அவமானப் படுத்துவதாகவும், நம்பிக்கையை இழக்கச் செய்வதாகவும் தெரிவதால், இக்கூட்டம் பெரியார் மீது நம்பிக்கையை இழந்து விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறது.

3. பெரியார் அவர்கள் தனது "விளக்கம்" என்னும் கட்டுரையில் இயக்கத் தோழர்கள் ஒருவரிடமும் தனக்கு நம்பிக்கை இல்லை என்று எழுதுவது இயக்கத் தோழர்களை மிகவும் அவமானம் படுத்துவதாக இருக்கிறது. எனவே பெரியார் அவர்களின் அந்த வாக்கியத்தை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

4. தலைவர் அவர்கள் தற்போதுள்ள "வாரிசு உரிமை"ப் போக்கை மாற்றிக்கொள்ள வேண்டுமென்றும், அப்படி மாற்றிக் கொள்ளாதபடி கழகக் கொள்கைக்கு மாறாக நடந்தால் இவ்வூர் கழகமானது பெரியார் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் போட்டு அனுப்பி, தலைவர் பதவியை மாற்றி அமைக்கப் பாடுபடவேண்டுமென்றும் இக்கூட்டம் ஏகமனதாகத் தீர்மானிக்கிறது.

A. அய்யாச்சாமி,
செயலாளர்

வடகோவை திராவிடர் கழகம்

வடகோவை திராவிட கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 3-7-49' மாலை 5 மணிக்கு தோழர் எம். சாமியப்பன் அவர்களின் தலைமையில் கூடி கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியது.

1. திராவிட இயக்கத்தலைவர் பெரியார் அவர்களுக்குப் பணிவுடன் விண்ணப்பித்துக் கொள்வது: ஐயா, தங்கள் 72வது வயதில் 26 வயதான தோழியர் K. A. மணி அம்மை அவர்களைப் பதிவுத் திருமணம் செய்துகொள்ளப் போவதாகப் பத்திரிகையில் வெளிவந்திருப்பதைக் கண்டு இக்கமிட்டி வருந்துவதுடன், இவ்வேற்பாடு எல்லா வகையிலும் இயக்கத்திற்கு இழுக்குத் தருமாதலால் இதை உடனேரத்துசெய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்வதுடன் ரிஜிஸ்டாருக்குக் கொடுத்துள்ள விண்ணப்பத்தையும் உடனே வாப்பீஸ் பெறுமாறு இக்கமிட்டி கேட்டுக் கொள்கிறது.

2. கோவை மாநாட்டிலும், பெரியாருடைய பத்திரிகை அறிக்கையிலும் கழக அங்கத்தினர் எவரிடமும் நம்பிக்கையில்லெ என்று சொன்னதை இக்கமிட் வன்மையாகக் கண்டிக்கிறது.

3. பெரியார் தமது தற்போ தைய திட்டத்தை மாற்றிக்கொள் கழக அங்கத்தினர் விருப்பப்ப காரியத்தைச் செய்யத் தவறு ராளுல் கழகத்திற்கு வேறு தலை ரைத் தேர்ந்தெடுக்க வேண்டி முயற்சிகளை உடனடியாக ஏற்பா செய்யவேண்டுமாய் மத்திய திரா விட கழகத்தை இக்கமிட்டி கே டுக்கொள்கிறது.

4. மேற்கண்ட வேண்டுகோள் நிறைவேற்றும் வரை கழகத் விருந்து விலகியிருப்பதென்று இ கமிட்டி ஏகமனதாகத் தீர்மானி கிறது.

மெ. கனகரத்தினம்.
செயலாளர்

புரசை முன்னேற்றக் கழகம் சென்னை

இக் கழகக் கமிட்டிக் கூட்ட 4-7-49 மாலை கழகக் கட்டிடத்தில் நடைபெற்றது. பெரியாரின் திரு மண ஏற்பாட்டைப்பற்றி தோழ கள் ஆரோக்கியதாசன், ஆ. ச சுந்தரமூர்த்தி, வீராசாமி ஆகி யோர் விளக்கிப் பேசினர். இறுதி யில், திராவிடர் கழகத்தில் உண் மையாகவும் பல காலமாகவும் பல இன்னல்களுக்கிடையிலும் பணி யாற்றிவருபவர்கள் பலர் இருக்க மணியம்மை ஒருவர் மட்டுமே தன் நம்பிக்கைக்கு உரியவர் என்று பெரியார் அறிவித்திருப்பதை வன் மையாகக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேறியது.

விருதுநகரில் எதிர்ப்பு

விருதுநகர், ஜூலை. 1—

இவ்வூர் நாடார் பரிபாலன சங்கத்தில் விருதுநகர் திராவிட கழக உறுப்பினர் பொதுக் கூட்டம் இன்று கூடியது. கீழே கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:—

"திராவிட கழக பொருள், கழகத்திற்காக பெரியார் ஈ. வெ. ரா.

சேர்த்த பொருள்; அவரிடம் நாதியற்று கழகமும் பொருளும் அழிந்துவிடாதபடி, பாதுகாப்பதற்காக ஒரு டிரஸ்டி பத்திரம் எழுத அவர் செய்திருக்கும் ஏற்பாடு விஷயமாய் 28-6-49 'விடுதலை'யில் அவர் வெளியிட்ட அறிக்கையை இக்கழகம் நன்கு பரிசீலனை செய்தது. அதன் பயனாக அவர் 26 வயதுடைய மணியம்மையாரை மணம் செய்துகொள்ள எடுத்து இருக்கிற ஏற்பாடு கழகத்தின் சமுதாயக்கொள்கையின் முக்கிய பகுதிக்கு முற்றிலும் மாறுபட்டதாய் இருப்பதால் இந்த ஏற்பாட்டை கைவிடும்படி பெரியாரைக் கேட்டுக்கொள்கிறது.

திருமணத்தை நிறுத்திவிடவும்! திருச்சி மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்

திருச்சி. ஜூலை 4.

இன்று இங்கு திருச்சி மாவட்ட திராவிடர் கழக நிர்வாகிகள், முக்யஸ்தர்கள் கூட்டம் நடைபெற்றது. திராவிடர் கழக நிர்வாகத் தலைவர் டி. பி. வேதாசலம் தலைமை வகித்தார். தம் திருமண எண்ணத்தைப் பெரியார் உடனே கைவிடவேண்டும் என்று வற்புறுத்திக் கூறும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

வந்தவாசி 6-7-49

நம் தலைவர் அவர்கள் இந்தத் தள்ளாத வயதில் முப்பது வயதுப் பெண்ணாகிய திரு. மணியம்மையை மணந்துகொள்ள முன்வந்திருப்பது நம் கட்சியைப் பொறுத்தவரை ஓர் அபாயகரமான ஏற்பாடு என்றே நான் எண்ணுகிறேன். இந்த ஆபத்தான ஏற்பாட்டை அவர் கைவிட ஒப்புக்கொள்ளா விட்டால் நான் அவர் தலைமையின்கீழிருந்து பணியாற்ற முடியாது என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். கட்சி நல்ல வளர்ச்சி நிலையில் இருக்கும் இத் தருணத்தில் பெரியார் இத்தகைய பேரிழிவை கட்சியின்மீது சுமத்தியிருப்பது மன்னிக்க முடியாத குற்றம் என்பது என் கருத்து. வணக்கம்.

K. V. T. சீனிவாசன்,
திராவிடர் கழகத் தலைவர்.

விம்மலும் விலகலும்

[மு. கருணாநிதி]

இதயத்தில் ஈட்டி எறிந்தது போல பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் செய்துள்ள முடிவுகள் என்னைத் தாக்கின. இயக்கத் தோழர்கட்குத்தான் எத்தனை அவமானம்! எத்தனை அபாண்டம் அவர்கள் மேல் சுமத்தப்படுவது? நெஞ்சு பொறுக்கவில்லையே!...... கடமையுணர்ச்சி காரணமாய் அனைவரும் செய்திடும் முடிவே என்னையும் இழுக்கிறது. பெரியார் நம் வேண்டுகோளுக்கு மதிப்புத் தரவிடில் அவர்தம் தலைமையை ஏற்காது, அவர் கீழிருந்து பணியாற்றும் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்கிறேன் விம்மலுடன்!... வேதனையுடன்!...வெற்றி நம் பக்கம் என்ற உறுதியுடன்!

திராவிட மாணவர் கழகங்களுக்கு! தலைவர் மதியழகன் தாக்கீது.

சென்னை மாகாண திராவிட மாணவர் கழகத் தலைவர் தோழர் கே. ஏ. மதியழகன் கீழ்க்கண்ட அறிக்கையைப் பிறப்பித்துள்ளார்:

''பெரியார் இராமசாமி அவர்கள் செய்து கொள்ளவிருக்கும் பொருந்தாத் திருமண ஏற்பாடு நம் கொள்கைகளுக்கு நேர்மாறாக இருப்பது கண்டு நான் பெரிதும் வருந்துகிறேன். எனவே பெரியாரின் தலைமையின்கீழ் நான் இனியும் இருந்து பணியாற்றுவதென்பது இயலாது என்பதை அனைவர்க்கும் தெரிவித்துக் கொள்கிறேன். நாடெங்கும் உள்ள திராவிட மாணவர் கழகங்களைச் சேர்ந்த எல்லா உறுப்பினர்களும், இனி, பெரியார் இராமசாமியின் தலைமையின் கீழ் பணியாற்றுவதிலிருந்து விலகிவிட வேண்டும் என்று, மாகாண மாணவர் கழகத் தலைவன் என்ற முறையில் நான் வேண்டிக்கொள்கிறேன்.''

பெரியாரின் செயலுக்கு-''விடுதலை''யிலேயே எதிர்ப்பு! துணை ஆசிரியர்கள் வெளியேறினர்! தோழர் சம்பத் விலகினார்!

ஜூலை 1.

தோழர் திராவிடமணி ''விடுதலை''யிலிருந்து விலகிய நாள் முதல், விடுதலையின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுத் திறம்பட நடத்தி வந்த பெரியாரின் அண்ணார் மகனும், மாகாண திராவிடர் கழக நிர்வாக உறுப்பினருமாகிய **தோழர் E. V. K. சம்பத்** இன்று, பெரியாரின் போக்கைக் கண்டிக்கும் அறிகுறியாக விடுதலை அலுவலக மேனேஜர் பதவியை ராஜினமா செய்து விட்டார்.

''விடுதலை'' ஆசிரியர் குழுவில், தலைமை ஆசிரியர் தோழர் குருசாமி அவர்களுக்கு அடுத்த நிலையில் இருந்து, சென்னையில் ''விடுதலை'' தொடங்கப்பட்ட நாளிலிருந்து ''விடுதலை'' உதவி ஆசிரியராக நற்பணி ஆற்றி வந்தவரும், ''நிலவு'' இதழாசிரியரும், சிறந்த எழுத்தாளருமாகிய **தோழர் பூ. கணேசன்** (B.A. Hons.) அவர்களும், விடுதலை ஆசிரியர் குழுவிலே மற்றொரு சிறந்த உதவியாசிரியராக இருந்து அருந்தொண்டு ஆற்றிவந்த **தோழர் அரங்கண்ணல்** அவர்களும், இன்று, பெரியார் அவர்கள் சென்னைக்கு வந்து விடுதலை அலுவலகத்தில் நுழைந்ததும் அவரிடம் தங்கள் ராஜினமா கடிதங்களைச் சமர்ப்பித்துவிட்டு வெளியேறி விட்டனர்.

''விடுதலை''யில் மிக முக்கியப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் சென்னை மாவட்ட திராவிடர் கழகச் செயலாளர் தோழர் **கே. கோவிந்தசாமியும்** இன்றே தன் வேலையை ராஜினமா செய்வதாக பெரியாரிடம் தெரிவித்து விட்டார்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றின் புனிதத் தன்மையை தூய்மையை, அவரால் உணர முடியவில்லை. கண்ணீரின் மகத்துவத்தை அறியமுடியாத கனவானாகிவிட்டார் அவர்! ஏன் கண்ணீர் சிந்துகிறீர்கள் தோழர்களே, முகத்தைத் துடைத்துக் கொள்ளுங்கள். கண்ணீர் சிந்தியது போதும், கடமையைச் செய்ய வாருங்கள். **இனி வேண்டுகோள் வேண்டாம்—கண்டனங்களை அனுப்புங்கள்.** இந்த முப்பதாண்டம்மையை அவர் மணந்து கொள்வாரானால் அவர் தலைமையை உதறித் தள்ளுவோம் என்பதை அழுத்தந் திருத்தமாக அவருக்கு அறிவியுங்கள். ஒவ்வொரு திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டியையும்கூட்டி, **திருமணம் நடந்துவிட்டால் அவர் தலைமையை ஏற்கமாட்டோம்** என்பதை திட்ட வட்டமாகத் தீர்மானித்து, தீர்மானத்தை அவருக்கு அனுப்பிவிட்டு, நகலை காஞ்சிபுரம் "திராவிடநாட்"டிற்கும் சென்னை "போர்வாளு"க்கும் அனுப்பிவையுங்கள். இந்த இரு ஏடுகளும் சின்னஞ்சிறியனவே. என்றாலும் சுருக்கமாகவாவது இயன்ற அளவிலாவது வெளியிடுகிறோம். என் செய்வது? "விடுதலை" வெளியிடாது. அங்கு இருப்பவர்களுக்கு "மனம்" இராது வெளியிட. எனவே, நாங்கள்தான், இடமில்லை என்ற போதிலும் வெளியிட்டாக வேண்டும் கடமை உணர்ச்சிகாரணமாக. கமிட்டிக் கூட்டம் கூட்டி கண்டனத்தீர்மானம் நிறைவேற்றுவதோடு நில்லாது, நூற்றுக்கணக்கில் ஆயிரக்கணக்கில் "அவர் போக்கைக்கண்டிக்கிறோம். இந்தக்கண்டனத்திற்குஅவர் இசையமறுத்தால் அவர் தலைமையை ஏற்கமறுக்கிறோம்" என்பதை வலியுறுத்தி அவருக்குக் கடிதங்களை அனுப்பி, நகலை எங்கட்கு அனுப்புங்கள். இவ்வளவு கண்டனத்தையும் அவர் பொருட்படுத்தாமல் தன் மனம்போன போக்கில் செல்வாரானால், நம் கண்ணீரை உதாசீனம் செய்தது போலவே இந்தக் கண்டனத்தையும் விஷமத்தனம் என்றோ அயோக்கியத்தனம் என்றோ சொல்லிவிடுவாரானால், பிறகு நாம் அவரை விட்டுத் தனித்து நின்று நன்முறையில் பணியாயாற்றுவோம். ஆனால் அதுவரையில் கட்சியை விட்டு யாரும் விலக வேண்டாம். **பெரியாரை விட்டு விலகிநிற்கிறோம்** என்பதை மட்டும் அறிவியுங்கள். அவர் இத்திருமணத்தைச் செய்து கொண்டு கட்சிக் கொள்கையை மீறினால் கூட, அவர்தான் கட்சியிலிருந்து விலகவேண்டுமே தவிர நாம் ஏன் விலக வேண்டும்? ஒருக்கால், அந்த நிலைமையில் நாம் விலகிவிடுவதுதான் சிறந்ததுஎன்று எல்லாராலும் எந்தக் காரணத்தாலாவது கருதப்படுமேல் அப்போது நாம் அனைவரும் கூடிப்பேசி கலந்து முடிவு செய்து பிறகு விலகுவோம். ஆகவே அதுவரை யாரும் அவசரப்பட்டு கட்சியைவிட்டு விலகுவது போன்ற செயலில் ஈடுபட்டுவிட வேண்டாம். 10—7—49 ஞாயிறன்று கழக நிர்வாகக் கமிட்டி கூடுகிறது. அதன் முடிவும் தெரியட்டும். பிறகு. அனைவரும், கூட்டாக ஒரு நன்முடிவுக்கு வந்து, அந்த முடிவை நிறைவேற்றிவைப்போம். அதுவரையில் பொறுத்திருங்கள். பெரியாரிடமிருந்து விலகிக்கொள்கிறோம், என்பதை மட்டும் தெரிவியுங்கள். அதைஅழுத்தம்திருத்தமாகத்தெரிவியுங்கள். மற்றபடி தலைமையை நீக்குவது, கட்சியினின்று விலகுவது போன்ற வேறு நடவடிக்கைகளில் அவசரம் வேண்டாம். சில நாட்கள் பொறுத்திருந்தால் எதுவும் கெட்டுப்போய்விடாது. இவ்வளவு குழப்பமான நிலைமைகளிலிருந்து ஒரு தெளிவான நல்ல முடிவு வந்தே தீரும். அதில் யாருக்கும் ஐயம் வேண்டாம். மறுபடியும் அடுத்த கிழமை சந்திப்போம், வணக்கம்.

அன்று சொன்னதை இன்று இல்லை என்கிறார்!

பெரியாரின் முரண்பாடு

அன்று சொன்னது:

"எனக்குப் பின் **கட்சிக்கும்** என் சொந்தத்திற்கும் அடுத்த வாரிசு ஏற்படுத்த வேண்டும். இதை விரைவில் செய்யப் போகிறேன்."

—பெரியாரின் கோவை மாநாட்டுச் சொற்பொழிவு—"விடுதலை" 1-6-49 இதழ், பக்கம் 3, பத்தி 3, வரி 57.

இன்று சொல்வது

"ஈ. வே. ரா. எங்கும் திராவிட கழகத்திற்கு வாரிசு நியமிப்பதாகக் குறிப்பிடவே இல்லை. இது ஈ. வே. ரா. வின் எதிரிகளின் விஷமப் பிரசாரம்."

—பெரியாரின் விடுதலைத் தலையங்கம். விடுதலை 5-7-49 இதழ் பக்கம் 2, வரி 77.

வெந்த புண்ணில் வேலை நுழைக்கிறார் தலைவர்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வரால் நமக்கு வந்த அவமானம் தாங்க முடியவில்லையே என்பதை எண்ணி எண்ணி கண்ணீர் சிந்துகிறோம் நாம். இந்தக் கண்ணீர் பெருகுவதற்குக் காரணமாக இருக்கும் தலைவரோ நம் கண்ணீரைத் துடைக்காதது மட்டுமல்ல, கூரிய ஈட்டிமுனை கொண்டு கண்ணைக் குத்திக்குடைகிறார்!

ஆழமான, அகலமான, புண் ஏற்பட்டு விட்டது நம் உள்ளத்தில்! அதன் வலி பொறுக்கமாட்டாது துடிக்கிறோம் நாம்! அந்தப் புண்ணை ஏற்படுத்திய தலைவரோ புண்ணுக்கு மருந்து தேடவில்லை—கத்தி கொண்டு கீறிக் கீறி, புண்ணை பெரும் புண் ஆக்குகிறார்.

வெந்த புண்ணில் வேலை நுழைக்கிறார் தலைவர்!

நாம் கண்ணீர் சிந்துகிறோம்—அவர் நம்மீது கவண்கல் வீசுகிறார்!

குதிரை கீழே விழுந்ததும் அல்லாமல் குழியும் பறிக்கிறது என்பதுபோல, கள்ளன் பொருளைக் கவர்ந்ததும் அல்லாமல் வீட்டாரைக் கட்டாரியால் குத்திவிட்டும் போனான் என்பதுபோல, கணவன் மனைவியைச் சரிவர காப்பாற்றாததோடு இல்லாமல் வேறு "ஒருத்தி"யோடு சோரம்போனான் என்பதுபோல, பெரியார், நம்மைக் கண்ணீர் சிந்திக் கோவெனக் கதறி அழும் நிலைமைக்கு ஆக்கியதோடில்லாமல் நம்மீது அருவருக்கத்தக்க தமிழ் நடையில் வசை மொழிகளையும் வீசுகிறார்!

கொடுமை! கொடுமை! இதை விடப் பெருங்கொடுமை குவலயத்திலேயே வேறு இருக்கமுடியாது! ஒரு தலைவர், தன்னை மனமார நம்பி பரிபூரணமாகப் பின்பற்றி வந்த ஆயிரமாயிரம் கூட்டுத் தோழர்களுக்கு இதனினும் பெரிய கொடுமையைச் செய்ததாக உலக வரலாற்றிலேயே ஆதாரம் இருக்காது.

சுயநலமிகள்! விஷமிகள்! எதிரிகள்! பொது மக்களால் உஷாராகக் கவனிக்கப்பட வேண்டியவர்கள்!—எவ்வளவு பயங்கரமான வார்த்தைகள்! இவற்றை எவ்வளவு சாதாரணமாக நம்மீது வீசியிருக்கிறார் பெரியார்! எவ்வளவு துணிச்சல்!

இவ்வளவு கர்ண கடூரமான சொற்களை யார் யார் மீது வீசியிருக்கிறார் பெரியார்—பாருங்கள் பட்டியலை—பட்டியலைப் பார்த்தாலே போதும் இந்த வாசகங்களிலே புதைந்திருக்கும் கொடுமையின் முழு உருவமும் ஒரே கணத்தில் உங்களுக்குத் தெரிந்து விடும்.

அறிஞர் அண்ணாதுரை
பெத்தாம் பாளையம் பழனிச்சாமி
ஈ. வெ. கி. சம்பத்
என். வி. நடராசன்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
எஸ். ஆர். சுப்ரமண்யம்
சி. தங்கராஜ்
கே. கோவிந்தசாமி
சி. டி. டி. அரசு
இரா. நெடுஞ்செழியன்
க. அன்பழகன்
பூ. கணேசன்
புலவர் செல்வராஜ்
சத்தியவாணி முத்து

இடமின்மை கருதி பட்டியலை இந்த அளவோடு நிறுத்துகிறோம், பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியவர்கள் இன்னும் ஏராளம்! பெரியாரின் திருமண ஏற்பாடு கட்சிக் கொள்கைக்குப் புறம்பானது என்று கருதி, இத்தகைய அவமானகரமான நிலையில் நம்மை பெரியார் கொண்டுவந்து நிறுத்திவிட்டாரே என்று எண்ணி கண்ணீர் சிந்தியவண்ணம் இருக்கின்றனரே ஆயிரமாயிரம் திராவிடர்கள், அவர்கள் அத்தனை பேருமே இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியவர்கள்தான்! யார் யார் பெரியாரின் பொருந்தாத் திருமணத்தை ஏற்க மறுக்கிறார்களோ; யார் யார் இந்தத் திருமண ஏற்பாட்டால் கட்சியின் மானம் பறிபோகிறது என்று கருதுகிறார்களோ, யார் யார் பெரியாரின் விபரீதப் போக்கைக் கண்டு உள்ளம் துடித்து உடல் பதறி அந்தோ அந்தோ என்று கதறுகிறார்களோ, யார் யார் இந்த அவமானத்தாலே உணர்ச்சி குன்றி உற்சாகம்குன்றி உருவமே குன்றியதுபோல உள்ளம் குன்றி சோர்ந்து கிடக்கிறார்களோ, யார் யாருக்கு பெரியாரின் இந்தப் புது ஏற்பாடுகள் அவ்வளவும் பிடிக்கவில்லையோ அவர்கள் அத்தனை பேரையும்தான் பெரியார் சுயநலமிகள், விஷமிகள், எதிரிகள், உஷாராகக் கவனிக்கப்பட வேண்டியவர்கள் என்று மனம் கூசாது கூறுகிறார்!

"பெட்டிச்சாவி என்னிடம் இருப்பதால் சரக்கு எதுவும் காணாமல் போய்விடாது. பத்திரமாகத்தான் இருக்கும். இருந்தாலும் ஒரே ஆளிடம் தொடர்ந்தாற்போல ஆண்டுக்கணக்காகச் சாவி இருந்தால் யாருக்கும் சலிப்பு வரத்தானே செய்யும்? மேலும், வயது வந்த மகனிடம் பெட்டிச் சாவியைக் கொடுக்க வேண்டியது தானே நியாயம்? எனக்கும் வயது 70 தாண்டிவிட்டது. இனியும் எத்தனை நாளைக்கு நானே பெட்டிச்சாவியை வைத்துக்கொண்டு அலைந்து திரிந்து பணியாற்றிக் கொண்டிருக்க முடியும்? ஆகவே பெட்டிச்சாவியை அண்ணாவிடம் கொடுக்கத் தீர்மானித்துவிட்டேன்." என்று நாலாறு மாதங்களுக்கு முன்னால், ஈரோடு மாநாட்டின்போது, அண்ணா அவர்களைப் பாராட்டிப் பேசினார் பெரியார். அன்றைய தினம் பெட்டிச் சாவியைக் கொடுத்துவைப்பதற்கு மிகவும் ஏற்றவராகப் பெரியாரால் கருதப்பட்ட அறிஞர் அண்ணாதுரைகூட இன்றையதினம் பெரியாரின் பொருந்தாத் திருமணத்தை எதிர்க்கிறார் என்ற ஒரே காரணத்தால் சுயநலமி—விஷமி—எதிரி—உஷாராகக் கவனிக்கப்படவேண்டியவர் என்றெல்லாம் அழைக்கப்படுகிறார் பெரியாரால்! சே! எவ்வளவு விபரீதமான நிலைக்கு தன்னைத்தானே இறக்கிக்கொண்டுவிட்டார் பெரியார்! உண்மையிலேயே பெரியாரா இப்படியெல்லாம் எழுதத் தொடங்கிவிட்டார் — நம்பவே முடியவில்லையே நம்மால் — எப்படித்தான் மனம் துணிந்தது அவருக்கு இப்படி எழுத—கட்சிப் பணியிலே பேருக்கமும் பெருத்த உற்சாகமும் கொண்டு பணியாற்றி வரும் அத்தனைபேரையும் விஷமிகள் என்று கூறுவதானால் அதற்கு எவ்வளவு இறுகிப்போன நெஞ்சு இருக்கவேண்டும் — பெரியாருக்கு அப்படிப்பட்ட நெஞ்சா இருக்கிறது—இருக்கமுடியாதே — முடியாதென்றால் இப்படிப்பட்ட வாசகங்களை எப்படி எழுத முடிந்தது அவரால்—அந்தோ ஈதென்ன விபரீதம்! பெரியார், கட்சிப் பணியையே தம் வாழ்க்கைப் பணியாகக் கொண்டு, சகல கஷ்ட நஷ்டங்களையும் ஏற்று, அல்லும் பகலும் இயக்கத் தொண்டாற்றி வரும் நம் உ

கண்ணீருக்கும் கண்டனத்திற்கும் பதில் கூறமுடியாதாம்!

ருக்குயிரான அருமைத் தோழர்களைப் பார்த்து விஷமிகள் என்று கூறுகிறாரே—சொல்லலாமா அவர் இதுபோல—அவர் இருக்கும் உயர் நிலைக்கு ஏற்ற நடத்தை அல்லவே இது—என்றாலும் செய்கிறாரே இதுபோல—என்னவென்று கூறுவது நாம்! கொடுமை கொடுமை என்று குமுறி அழுவதைத் தவிர வேறென்ன கூறமுடியும் நம்மால்!

“என் வார்த்தையை — நடத்தையை நம்பாமல், ஒப்புக்கொள்ளாமல், எனது காரியத்தைக் குறை எண்ணுபவர்களுக்குச் சமாதானம் சொல்லவோ அவர்களுக்குத் திருப்தி ஏற்படும்படி நடக்கவோ இந்த அவசர சமயத்தில் நான் கவலை எடுத்துக்கொள்ளுவதும் கருதுவதும் வீண் வேலை என்று கருதித் தீரவேண்டியவனாக இருப்பதால் அந்த வேலையை நான் இப்போது மேற்கொள்ளவில்லை.” —இதுதான் பெரியார் நம் அனைவரின் கண்ணீருக்கும் கண்டனத்திற்கும் தரும் பதில்.

நம் கண்ணீரைத் துடைக்க முயல்வதே, நம் கண்டனத்திற்குப் பதில்கூற எண்ணுவதே வீண் வேலையாகத் தோன்றுகிறது பெரியாருக்கு. ஆனால் அதே சமயத்தில் நம்மீது வசைமொழிகளை அள்ளி வீசுவதுமட்டும் அவசிய அவசர காரியமாகத் தோன்றியிருக்கிறது அவருக்கு. பெரியாரின் திருமணம் நம் கொள்கைக்கு முரணானது என்பதை, நாம் மிகப்பணிவாக, மிகமிக அன்போடு, சொல்கிறபோது அவருடைய மனம் சிறிதும் புண்படக்கூடாது என்பதில் அளவுக்கு மீறிய கவலையுடன், தேவையான அளவுக்குமேல் ஒரு சொல்கூட சொல்லப்படக்கூடாது என்பதில் சர்வ ஜாக்கிரதையுடன் எடுத்துக் காட்டியிருக்கிறோமே, இது, இந்தச் செயல், “**வெளியில் எதிரிகளால் பேசப்படும் — விஷமப் பிரசாரம் செய்யப்படும்—காரியம்**” என்று விஷம்போன்ற வார்த்தைகளால் சித்தரிக்கப்பட்டிருக்கிறது பெரியாரால். நாம் எதிரிகளாம்! விஷமிகளாம்! சுய நலமிகளாம்! கூறுகிறார் பெரியார்! அதுவும் யாரைப் பார்த்து, யாரிடத்தில் இந்த விதமாகக் கூறுகிறார் தெரியுமோ? பாரததேவி, இந்தியன் எக்ஸ்பிரஸ், தினச் செய்தி ஆகிய எதிர்க்கட்சி ஏடுகளின் நிருபர்களைப் பார்த்து! நாமெல்லாம் விஷமிகள், எதிரிகள், சுயநலமிகள் என்றெல்லாம் பெரியார் நம்மீது சாடி சொல்கிறார் — அவருக்கும் நமக்கும் ஒருசேர நண்பர்களாக இருப்பவர்களிடம் அல்ல அவர் சாடி கூறியிருப்பது — அப்படிப்பட்டவர்களிடம் “சாடி” கூறியிருந்தாலாவது அதற்கு ஏதாவது அர்த்தம் உண்டு என்று ஒப்புக்கொள்ளலாம்—ஆனால் அவர் நம்மைப்பற்றி இழித்துரைத்திருப்பது அவருக்கும் நமக்கும் பொது எதிரிகளாக இருக்கும் மாற்றுக் கட்சி ஏடுகளிடம்! கட்சித் தலைவர் தன் கட்சித் தோழர்களை எதிரிகளிடம் காட்டிக்கொடுக்கிறார்! நம்மையெல்லாம் விஷமிகள் என்று எதிரிகளுக்குக் கூறுகிறார்! ஒரு கட்சித் தலைவர் தன் கட்சிக்குச் செய்யக்கூடிய துரோகம் இதைவிட வேறு இருக்கமுடியாது.

“திராவிடர் கழகம் ஈ. வெ. ரா. ஸ்தாபித்தது. ஆகவேதான் அக்கழகத்திற்கு வாரிசை நியமிப்பதில் அவர் பெரிய சிரத்தை எடுத்துக்கொள்கிறார் என்று “தினச் செய்தி” பிரசுரித்து இருக்கிறது. இது, தவறான கருத்துக்கும், எதிரிகளின் விஷமப் பிரசாரத்திற்கும், ஆதரவு அளிப்பதாகும். எப்படியெனில், ஈ. வெ. ரா! எங்கும் திராவிட கழகத்துக்கு வாரிசு நியமிப்பதாகக் குறிப்பிடவே இல்லை. இதை ஈ. வெ. ரா. வின் எதிரிகள் விஷமப் பிரசாரம் செய்கிறார்கள் என்றால், இந்தப் பத்திரிகை அதற்குத் துணைபோக வேண்டிய அவசியமில்லை.”

5-7-49 “விடுதலை”யில், “ரிப்போர்ட்டர்கள் பேட்டி” என்ற தலைப்பில் பெரியார் அவர்கள் எழுதியுள்ள தலையங்கத்தில் வரும் முக்கியப் பகுதி இது! இந்தப் பகுதியில் பெரியார், நாம் ஏதோ பெரியாரின் உண்மை எதிரிகள் என்பதாகவும், “தினச் செய்தி” ஏதோ அவருடைய உண்மை நண்பன் என்பதாகவும், இந்த “எதிரிகள்” கூறுவதை அந்த “நண்பன்” ஆதரிக்க வேண்டியது அவசியமில்லை என்பதாகவும் மிக சாமர்த்தியமாக எழுதி இருக்கிறார் என்பதைப்பற்றி நினைத்துப் பார்க்கும் திராவிடர் கழகத் தோழர்கள் எவர் உள்ளமும் பதறாமல் இருக்கமுடியாது.

இருக்கட்டும்! நம்மை எதிரிகள்—விஷமிகள் என்றே அவர் சொல்லட்டும்! எதிர்க்கட்சி ஏடுகளை நண்பர்கள் என்றே கருதட்டும்! இந்த எதிரிகள் பேசும் விஷமப் பேச்சை நீங்கள் நம்பலாமா என்ற தோரணையில் நம்மைச் சுட்டிக் காட்டி நம் மாற்றாரிடம் நம்மைப் பற்றி தவறான முறையிலே அவர் பேசிக்கொண்டு போகட்டும். நம்மை, அவருடைய உண்மைத் தொண்டர்களை, இது நாள்வரை அவரை முற்றமுடிய ஆதரித்துப் பணியாற்றி வந்தவர்களை, தம் உள்ளத்தின் உள்ளே வீற்றிருக்கும் தலைவர்பிரான் என்று அவரை எண்ணிப் போற்றி ஆதரித்து மகிழ்ந்து வந்தவர்களைத் தாக்குதல் மொழியாலே அலங்கரித்துப் பார்க்க வேண்டுமென்பது அவருடைய ஆசைபோலும்! அந்த ஆசைக்கு நாம் ஏன் குறுக்கே நிற்கவேண்டும்! தாராளமாக நம்மைத் தாக்கட்டும்! எத்தனை ஆயிரம் முறை வேண்டுமானாலும் நம்மை விஷமிகள் என்று எழுதட்டும்! தம் “விடுதலை” அச்சகத்திலே எவ்வளவு எழுத்துக்கள் உண்டோ அவ்வளவு எழுத்துக்களையும் கொண்டு நம்மை சுயநலமிகள்—பிறரால் உஷாராகக் கவனிக்கப்படவேண்டிய பேர்வழிகள் என்று எழுதித் தீர்க்கட்டும்! அவர் மனவலிமை எவ்வளவு உண்டோ, அவர் உடலில் உரம் எவ்வளவு இருக்கிறதோ, அவர் பேனாமுனைக்குத் “தாக்கும் ஆற்றல்” எந்த அளவுக்கு உண்டோ, அவரால் எவ்வளவுக்கு முடியுமோ, அவ்வளவுக்கு நம்மைத் தாக்கட்டும்! தினம் தினம் தாக்கட்டும்! “விடுதலை”யின் வரிக்கு வரி தாக்கட்டும்! நாம் ஏன் என்று கேட்கப் போவதில்லை, ஏதோ நம்மைத் தாக்க வேண்டுமென்பது அவருடைய ஆசைபோல் இருக்கிறது அந்த ஆசை தீர்ந்து போகட்டும் என்று நாம் சும்மா இருந்து விடுவோம்! அவர் நம்மை எவ்வளவு தாக்கினாலும் நாம் திருப்பித் தாக்கமாட்டோம் ஆனால் நம்

(4-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ila chelivan B. A. (Hons)